MR. SPEAKER : Do you want to suggest any new colour?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I just want to tell the Hon. Minister that the change of colour is not necessary. We will be only incurring extra expenses. I have seen some buses plying with the colour ' blue ' and with the name ' Pallava Pokkuvarathu Kazhagam '. But the Hon. Minister has said that the colour has not been changed. I have seen otherwise. Will he verify the fact again?

அர்ச்சனைகளுக்கு சீரான கட்டணங்கள்

*314 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத் திருக்கோவில்களில் அர்ச்சனை டிக்கட்டுகளின் கட்டணத் தொகையை எல்லாக் கோவில்களிலும் ஒரே விதமாக நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

பழனியில் பஞ்சாமிர்தம் விற்பனை நிலையம்

*315 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பழனியில் பஞ்சாமிர்தம் தயாரித்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை அறநிலையத்துறை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : பழனியாண்டவனுக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சாமிர்தத்தில் பழனியாண்டவர் சிலையில் இருக்கும் மருந்துச் சரக்கு சேருவதாகப் பக்தர்கள் மிக நம்பிக்கையோடு கூறுகிறார்கள். இதை ஆராய்ந்து அறிய குழு ஒன்று நியமித்து அப்படியிருக்குமானால் அரசாங்க மருத்துவ மனைகளில் அதைப் பயன்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது ஆலயத்தின் சார்பில் பஞ்சாமிர்தம் தயார் செய்யப்பட்டு வருகிறது. தரிசிக்க வருகிற பொதுமக்கள் இதை வாங்கிப் பாராட்டுகிறார்கள்.